முருகப்பெருமான் துணை

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

18.07.2024

1. சரவணஜோதி கலந்த அரங்கனும்
சற்குருவாய் சீடர்களை நோக்கி
அறத்தின் காவலாக அருட்சுவடி வழி
அறிவிப்பேன் குரோதி நள்ளி திங்கள்

2. திங்களிலே முதல் குருவார ஆசியை
தெரிவிப்பேன் அரங்கமகான் யானும்
ஓங்காரக் குடிலின் செயல்பாடுகளுக்கும்
ஓங்கார ஞானம் உலகெலாம் பரவவும்

3. பரவவும் வழிகாட்டி அருள்வேன்
பண்பான அரங்கன் என் சன்மார்க்கமே
தரணி காக்கும் உயர் வழியாகும்
தவசி என் தவதரும பலமடைய

4. அடையவே உலகப் பெருமக்கள்
அரங்கன் என் ஜீவதடம் அணுகி
தடையற ஜோதி வழிபாடு செய்து
தவசியானருளும் அருளமுது உண்டு

5. உண்டான ஞானிகள் வகுத்த தீட்சையை
உயர்சீடன் ராம்குமார் கரம்பட பெற்று
தொண்டர்களும் புதியதாக வரும் மக்களும்
தேசிகாய என வணங்கி பூசை தொடர

6. தொடரவே அரங்கன் என் துணை
தொடர்ந்து வந்து உங்களை காக்கும்
இடர்களே வாழ்வில் அணுகாதபடி
எல்லா பாதுகாப்பும் தந்து இனிதே

7. இனிதே அவரவர்க்கும் ஞானம்
என் ஜோதி சக்தி வடிவாகியே
கனிவேலவன் அருளாக இறங்கி
காட்சி ஆசியென தர வரம்கூடி

8. கூடியே வரும் மக்களெல்லாம்
கும்பன் முதல் அரங்கனென் ஆசி
நாடியே ஞானவாழ்வு பெறுவதுடன்
ஞானிகளாகும் வாய்ப்பும் கிட்டி

9. கிட்டியே அரங்கன் யான் அருளிவர
குறைவிலா தேட்டு தனவளமுடன்
இட்டம்போல் சகல காரிய வெற்றி
எண்ண சித்தி ஞானசித்தியும் அடைவர்

9. அடையவே பிரணவக்குடில் தொடர்பில்
அன்னதான சேவைவழி பொருளுதவி கேட்டு
தடையற தேடிச்செல்பவர் எல்லாம்
தவராஜன் என்னால் ஞானியாக்கப்படுவர்
அரங்கமகான் என் அருளாசி முற்றே.

–சுபம்–